# ?????????????? ??? ??????
# ?????????????????? ????????????? ????????!



இலங்கை போர்க்குற்றவாளிகள் மீதான அமெரிக்காவின் தடையானது பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நம்பிக்கை விதை. இது குற்றவாளிகளுக்கு எதிரான குறைந்தளவிலான விசா தடை மட்டுமல்ல. அவர்களின் அதிகாரிகளுக்கான எச்சரிக்கை சமிக்ஞை என என சர்வதேச உண்மை மற்றும் நீதித்திட்டத்திற்கான அமைப்பின் பணிப்பாளர் யஸ்மின் சூக்கா (**ITJP**) தெரிவித்துள்ளார்.

மனித உரிமை மீறல்களுக்காக இலங்கை இராணுவ அதிகாரிகள் மேலும் இருவருக்கு அமெரிக்கா இன்று தடை விதித்துள்ளதை வரவேற்று சற்று முன்னர் **ITJP** வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் இநடைபெற்ற போர்க்குற்றம் மற்றம் மனித உரிமை மீறல்களுக்காக கடந்த ஆண்டு (2020) இல் இலங்கை இராணுவத் தளபதி சவேந்தி சில்வாவுக்கு எதிராக பயணத்தடை விதித்திருந்த அமெரிக்கா இன்று மேலும் இரு இராணுவ அதிகாரிகளுக்கு தடை விதித்துள்ளது. தி திருகோணமலையில் காணாமல் போன 11 பேருடனான சம்பவத்துடன் தொடர்புடைய இலங்கை கடற்படை புலனாய்வு அதிகாரி சந்தன ஹெட்டியாராச்சி மற்றும் 8 தமிழர்களை கொலை செய்த சம்பவத்தில் தொடர்புடைய சுனில் ரத்நாயக்க ஆகிய இருவருக்கும் அவர்களின் குடும்பத்தினருக்கும் அமெரிக்காவிற்குள் நுழைய தடை விதித்துள்ளது.

இந்நிலையிலேயே மேற்படி அமெரிக்காவின் தடை விதிப்பை **ITJP** யின் பணிப்பாளர் ஜஸ்மின் சூக்கா வரவேற்றுள்ளார். இது குறித்து வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

அமெரிக்காவின் தடை விதிப்பானது குறித்த குற்றவாளிகளின் அதிகாரிகளுக்கும் இன்னும் பதவிகளிலிருக்கும் போர்க்குற்றவாளிகளுக்கும் ஒரு எச்சரிக்கையாகும். அதிகாரிகள் மீதா குற்றச்சாட்டுக்களை கைவிடுமாறு ஜனாதிபதி பரிந்துரைப்பதும் அதற்கு சாதகமாக ஆணைக்குழுக்களை அமைப்பதும் குற்றவாளிகளுக்கு மன்னிப்பு வழங்குவதும் இன்னும் இலங்கையில் தொடர்கிறது.

இலங்கை உயர் நீதி மன்றில் குற்றவாளிகளுக்கு எதிரான அனைத்துக் குற்றச்சாட்டுக்களும் கைவிடப்பட்டதன் பின்னர் நாம் தொடர்ந்தும் நீதிக்கா போராடுவதில் என்ன பயன் என்று அதில் எங்கு நியாயம் கிடைக்கப்போகிறது என்ற நிலமைக்கு தள்ளப்பட்டோம். ஆனால் தற்போது அமெரிக்காவின் தடை செய்தி இதயத்தில் மீண்டும் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதிக்கான நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது என தெரிவித்துள்ளார்.

??? ??????? (அழுத்தவும்)

---

# ??????? ??????? ??????????? ??????? ??????????? ?????????? ???



மனித உரிமை மீறல்களுக்காக மேலும் இரண்டு இலங்கை இராணுவ அதிகாரிகளுக்கு அமெரிக்கா தடை விதித்துள்ளது.

போர்க்குற்றங்கள் தொடர்பில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீதான தடைகளை வெளியுறவுத்துறை மேலும் விரிவுபடுத்தியுள்ள நிலையில் திருகோணமலையில் காணாமல் போன 11 பேருடனான சம்பவத்துடன்

தொடர்புடைய இலங்கை கடற்படை புலனாய்வு அதிகாரி சந்தன ஹெட்டியாராச்சி மற்றும் 8 தமிழர்களை கொலை செய்த சம்பவத்தில் தொடர்புடைய சுனில் ரத்நாயக்க என்ற சிப்பாய் ஆகியோருக்கே அமெரிக்காவுக்குள் நுழைய தடை விதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அவர்கள் இருவரினதும் குடும்பத்திற்கும் அமெரிக்காவிற்குள் நுழைய தடை விதிக்கப்பட்டுள்ளது.

போர்க்குற்றங்களில் ஈடுபட்டதற்காக அமெரிக்காவுக்குள் நுழைவதற்கு தடை விதிக்கப்பட்ட இரண்டாவது மற்றும் மூன்றாவது இலங்கைப் படையினர் இவர்கள் ஆவர். முன்னர் 2020 ஆம் ஆண்டில், இலங்கை இராணுவத்தளபதி சவேந்திர சில்வாவிற்கு அமெரிக்காவிற்குள் நுழைவதற்குத் தடை விதிக்கப்பட்டது, இலங்கையில் நடந்த இறுதிப்போரில் "அவரது கட்டளைப் பொறுப்பின் கீழ் இ மனித உரிமைகள் நடைபெற்றமை நம்பகரமான தகவல்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட்ட நிலையிலேயே தடை விதிக்கப்பட்டது.

இது குறித்து அமெரிக்க வெளியுறவுத்துறை இன்று மாலை வெளியிட்டுள்ள அறிக்கையில் (அறிக்கை) எங்கள் வெளியுறவுக் கொள்கையின் மையத்தில் மனித உரிமைகளை பேணிக்காப்பதில் உறுதியாக உள்ளோம். முனித உரிமை மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்கள் எங்கு நடந்தாலும் அவற்றின் மீது கவனத்தை ஈர்க்கவும் பொறுப்புக்கூறலை மேம்படுத்தவும் பொருத்தமான அதிகாரங்களை பயன்படுத்துவதன் மூலம் இந்த உறுதிப்பாட்டை நாம் வழங்குவோம் என மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.